தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் - நகர் ஊரமைப்பு இயக்கத்தில் உள்ள பணியிடங்களுக்கு

# தேர்வு செய்யப்பட்ட 60 பேருக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, நவ.2-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.11.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் தொழில் நுட்ப உதவியாளர் (சிவில்) பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 36 நபர்களுக்கும், நகர் ஊரமைப்பு இயக்ககத்தில் அளவர் / உதவி வரைவாளர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 24 நபர்களுக்கும் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.**

**தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சமூகத்திலுள்ள அனைத்து வருவாய்ப் பிரிவினர் மற்றும் அரசு ஊழியர்களுக்கு வீட்டுவசதி ஏற்படுத்தி தருவதை நோக்கமாக கொண்டு செயல்பட்டு வருகிறது. இவ்வாரியம் சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் நிலையான வீட்டுவசதி தீர்வுகளை வழங்கி வருகிறது. மேலும், தற்போது இவ்வாரியம் பல அடுக்குமாடி கட்டடங்கள், வணிக மற்றும் அலுவலகக் கட்டடங்கள், மறுகட்டுமானத் திட்டங்களையும் மேற்கொண்டு வருகிறது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் பணிகள் தொய்வின்றி நடைபெறும் வகையில் அவ்வப்போது ஏற்படும் காலிப் பணியிடங்கள் உடனுக்குடன் நிரப்பப்பட்டு வருகிறது.

அந்த வகையில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் 36 தொழில் நுட்ப உதவியாளர் (சிவில்) காலிப் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக தேர்வு செய்யப்பட்ட நபர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

**நகர் ஊரமைப்பு இயக்ககம்**

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வரும் நகர் ஊரமைப்பு இயக்ககம், நகர்ப்புற திட்டமிடல், நிலப்பயன்பாட்டை ஒழுங்குப்படுத்துதல், உட்கட்டமைப்பு மேம்பாடு, குடியிருப்பு மற்றும் வணிக அபிவிருத்திகளுக்கு திட்ட அனுமதி வழங்கும் பணிகள் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் பணிகள் தொய்வின்றி நடைபெறும் வகையில் அவ்வப்போது ஏற்படும் காலிப் பணியிடங்கள் உடனுக்குடன் நிரப்பப்பட்டு வருகிறது.

அந்த வகையில், நகர் ஊரமைப்பு இயக்ககத்தில் 24 அளவர் / உதவி வரைவாளர் காலிப் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக தேர்வு செய்யப்பட்ட நபர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம். வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ்.முருகன், நகர் ஊரமைப்பு இயக்குநர் / தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் (மு.கூ.பொ.) பா. கணேசன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தருமபுரி மேற்கு மாவட்டம்

## காரிமங்கலம் கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

தருமபுரி மேற்கு மாவட்டம், காரிமங்கலம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் அடிலம் டி.அன்பழகன் அவர்களுக்குப் பதிலாக **திரு. ஜி.வி.கே.சரவணன்** (கெங்குசெட்டிப்பட்டி கிராமம், பைசுஅள்ளி அஞ்சல், காரிமங்கலம் வட்டம், தருமபுரி மாவட்டம்) அவர்கள் காரிமங்கலம் கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 31.10.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## ஈரோடு வடக்கு மாவட்டம்

## நம்பியூர் கிழக்கு ஒன்றியம்
## நம்பியூர் பேரூர்க் கழகப் பொறுப்பாளர் நியமனம்

### தலைமைக் கழக அறிவிப்பு!

ஈரோடு வடக்கு மாவட்டம், நம்பியூர் கிழக்கு ஒன்றியம், நம்பியூர் பேரூர்ச் செயலாளர் எஸ்.பி. ஆனந்தகுமார் அவர்களுக்குப் பதிலாக **திரு. என்.எஸ். ஆனந்தகுமார்** (11/4, பிள்ளையார் கோவில் வீதி, ஜிஎம்எஸ் பால் பண்ணை பின்புறம், நம்பியூர் - 638 458) அவர்கள் நம்பியூர் பேரூர்க் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்க் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 31.10.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## டி.என். பாபு (எ) இளவழகன்

### நவம்பர் 2 (2003)



நீதிக்கட்சியைத் தொடர்ந்து கழகத்தில் பணியாற்றிய தனது தந்தையின் வழியொட்டி, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

1979 முதல் 2003 வரை திருவண்ணாமலை நகரக் கழகச் செயலாளராக தொடர்ந்து 24 ஆண்டுகள் பொறுப்பு வகித்தவர்.

1986 முதல் 1990 வரை நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கற்பகம் கூட்டுறவு மொத்த பண்டக சாலை தலைவராகவும், திருவண்ணாமலை நகர கூட்டுறவு வங்கித் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக மிசா கைதியாக 48 நாட்களும்; 1986ல் நடைபெற்ற மொழிப் போராட்டத்தில் பங்கேற்று 45 நாட்கள் சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# திராவிட மாடல் அரசின் சிறப்பான கல்விக் கொள்கை - 2025

ஒன்றிய அரசு 1919 ஆம் ஆண்டு 477 பக்கங்கள் கொண்ட புதிய வரைவு தேசிய கல்விக் கொள்கையை வெளியிட்டவுடன் ஒரு குழுவை நியமித்து அதை ஆய்வு செய்து தமிழ்நாடு மாணவர்கள் நலனுக்கும் தமிழ்நாடு அரசின் கொள்கைகளுக்கும் எதிரான அந்த வரைவு தேசிய கல்வி கொள்கையைத் திரும்பப் பெறக்கோரி ஒன்றிய அரசுக்கு தி.மு.க. அறிக்கை அனுப்பியது. அதன்பின் ஒன்றிய அரசு வெளியிட்ட புதிய கல்விக் கொள்கை 2020 தமிழ்நாட்டின் நலனுக்கு எதிராக உள்ளது என தொடர்ந்து திமுக இயக்கமும், திராவிட மாடல் அரசும் எதிர்த்து வருகின்றன. சமூகநீதிக்கும் மாணவர்கள் நலனுக்கும் எதிரான ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கையைத் தமிழ்நாடு முதலமைச்சர் தொடர்ந்து எதிர்த்து வருவதுபோல் பல மாநில முதலமைச்சர்கள், துணைவேந்தர்கள், கல்வியாளர்கள், ஆசிரியர் மற்றும் மாணவர் அமைப்பினர், இந்தியாவின் மிகச்சிறந்த வரலாற்று அறிஞர் ரோமிலா தாபர் போன்ற பலரும் எதிர்த்து வருகின்றனர்.

குறிப்பாக ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கை பன்னெடுங்காலமாக தமிழ்நாட்டில் இருந்து வரும் பள்ளி கல்லூரி கல்விமுறையின் அடிப்படையையே மாற்றுகிறது. ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கை பல பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது.

தமிழ்நாட்டில் பல ஆண்டுகளாக பள்ளிகளில் நடைமுறையில் இருந்து வரும் 10, 11, 12 ஆம் வகுப்பு (10, +2) திட்டத்தை அடியோடு மாற்றி 5+3+3+4 எனும் புதிய பள்ளிக் கல்வி முறையை புதிய கல்விக்கொள்கை ஏற்படுத்துகிறது. இது பல நடைமுறை சிக்கல்களையும் பாதிப்புகளையும் ஏற்படுத்தும்.

தமிழ்நாட்டில் நெடுங்காலமாக நடைமுறையில் இருந்து வரும் தமிழ், ஆங்கிலம் எனும் இருமொழிக் கொள்கையை மாற்றி பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை சமஸ்கிருதம், இந்தி, ஆங்கிலம் எனும் மும்மொழிக் கொள்கை ஒன்றிய அரசின் கல்விக்கொள்கை நடைமுறைப்படுத்துகிறது. இது தமிழ்நாடு அரசின் இரு மொழிக் கொள்கைக்கு எதிரானது.

பாடத்திட்டத்திலும் சமஸ்கிருதத்தைக் கட்டாயமாக ஒன்றிய அரசு புகுத்துகிறது. தமிழ்நாட்டில் அனைவரும் பேசும் தாய்மொழியான அன்னைத் தமிழ்மொழியின் முக்கியத்துவத்தைக் குறைத்து, மிகச் சிலர் மட்டுமே பேசும் நடைமுறை புழக்கத்தில் இல்லாத சமஸ்கிருதத்தை அனைவரும் கட்டாயம் படித்தாக வேண்டும் என புதிய கல்விக்கொள்கை கூறுவது ஏற்க முடியாத ஒன்று. சமஸ்கிருதம், இந்தித் திணிப்பு மிகத் தவறானதாகும்.

6 முதல் 8ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு தொழிற்கல்வி எனும் பெயரில் தச்சு, தோட்டக்கலை, மண்பாண்டம் செய்தல் போன்ற குலக் கல்வி முறையை புதிய கல்விக்கொள்கை புகுத்துகிறது. இது சமத்துவம் மற்றும் சமூகநீதிக்கு எதிரானது. பகுத்தறிவு மற்றும் விஞ்ஞானம், கணினிக் கல்வி மேலோங்கியிருக்கும் நிலையில் மூடநம்பிக்கையை வளர்க்கும் விதமாக பஞ்சதந்திரம் ஜாதகம் போன்ற பாடங்கள் கற்பிக்கப்படும் என ஒன்றிய அரசு கூறுவது பிற்போக்கானது ஆகும்.

அரசுப் பள்ளிகளில் இடைநிற்றலைத் தவிர்ப்பதற்காக 1 முதல் 8 வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் பரிட்சையில் வெற்றி வழங்கப்படுகிறது. ஆனால் 3,5,8 வகுப்பு மாணவர்களுக்கு பொதுத்தேர்வு நடத்தப்படும் என புதிய கல்விக் கொள்கை கூறுகிறது. இது மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். இடைநிற்றலை அதிகரிக்கும்.

சமக்ரா சிக்ஷா அபியன் திட்டம் பள்ளிகளில் செயல்படுத்தப்படும் என கூறும் ஒன்றிய அரசு அதற்கான நிதியை மாநில அரசுக்கு தர மறுக்கிறது.

ஆசிரியர்களுக்கு பணி மூப்பு அடிப்படையில் ஊதிய உயர்வும், பதவி உயர்வும் வழங்கப்பட்டு வரும் நடைமுறையை மாற்றி இனிமேல் ஆசிரியர் தகுதித் தேர்வில் வெற்றிபெறும் ஆசிரியர்களுக்கு மட்டும் பதவி உயர்வும் ஊதிய உயர்வும் வழங்கப்படும் என்று புதிய கல்விக் கொள்கையில் கூறப்பட்டிருப்பது ஆசிரியர்களுக்கு மத்தியில் பெரிய மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது.

பள்ளிக்கல்வியில் மட்டுமல்ல; உயர்கல்வியிலும் ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கை பல பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கை 2020 உயர்கல்வியின் கட்டமைப்பையும் சிதைக்கிறது. இதனால் மாணவர்களின் உயர் கல்வியும் வேலைவாய்ப்பும் பெரிய அளவில் பாதிக்கப்படும்.

இதுவரை +2 தேர்வு மதிப்பெண் அடிப்படையில் பட்டப்படிப்புகளிலும் இளநிலை பட்டப்படிப்பு மதிப்பெண்கள் அடிப்படையில் பட்ட மேற்படிப்புகளிலும் மாணவர்கள் சேர்க்கை நடைபெற்று வருகிறது. ஆனால் இனிமேல் தேசிய தேர்வு முகமை (National Testing agency) நடத்தும் நுழைவுத் தேர்வு எழுதி அதில் வெற்றி பெறும் மாணவர்கள் மட்டும்தான் உயர்கல்வியில் சேர்க்கப்படுவார்கள் என்று புதிய கல்வி கொள்கை கூறுகிறது. இது மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். இடைநிற்றலை அதிகரிக்கும்.

இதுவரை பல்கலைக் கழகங்கள்தான் பட்டங்கள் வழங்கி வருகின்றன. இந்த நடைமுறையை மாற்றி இனிமேல் கல்லூரிகளே மாணவர்களுக்கு நேரடியாக பட்டங்களை வழங்கலாம் என ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கை கூறுகிறது. இதனால் மாணவர்களின் கல்வியும், வேலைவாய்ப்பும் பாதிக்கப்படும்.

பல காலமாக தமிழ்நாட்டு கலை அறிவியல் கல்லூரிகளில் மூன்று ஆண்டு பட்டப்படிப்பு, இரண்டாண்டு பட்ட மேற்படிப்பு முறைதான் நடைமுறையில் உள்ளன. இந்த உயர்கல்வி கட்டமைப்பை மாற்றி 4 ஆண்டு பட்டப்படிப்பு 1 ஆண்டு பட்ட மேற்படிப்பு முறையை ஒன்றிய அரசின் புதிய கல்விக்கொள்கை அறிவித்துள்ளது. இது பெரிய குழப்பத்தையும் பாதிப்பையும் ஏற்படுத்தும்.

இதுவரை இரண்டாண்டு பட்ட மேற்படிப்பு படித்த மாணவர்கள்தான் Ph.D. ஆராய்ச்சிப் படிப்பில் சேர முடியும். ஆனால் 4 ஆண்டு பட்டப்படிப்பு படித்த மாணவர் பட்ட மேற்படிப்பு படிக்காமல் நேரடியாக Ph.D. ஆய்வுப் படிப்பில் சேரலாம் என்று ஒன்றிய அரசு கூறுகிறது. இது ஆராய்ச்சியின் தரத்தை குறைத்துவிடும். வேலைவாய்ப்பில் குழப்பம் ஏற்படுத்தும்.

அதேபோல் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் 2 ஆண்டு B.Ed. படிப்புதான் நடைமுறையில் உள்ளது. ஆனால் கூடுதலாக 1 ஆண்டு B.Ed. மற்றும் 4 ஆண்டுகள் B.Ed. எனும் புதிய முறையை ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. இது மாணவர்களிடையே மன உளைச்சலையும் வேலை வாய்ப்பு பாதிப்பையும் ஏற்படுத்தும்.

மூன்று ஆண்டுகள் தொடர்ந்து படித்து பட்டப்படிப்பையும், இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து படித்து முதுநிலை பட்டத்தையும் பெறும் வகையில் உயர்கல்வி கட்டமைப்பு நடைமுறையில் உள்ளது. ஆனால் புதிய கல்விக் கொள்கை உயர் கல்வி பயிலும் மாணவர்கள் தமது படிப்பிலிருந்து எப்போது வேண்டுமானாலும் வெளியே செல்லலாம், எப்போது வேண்டுமானாலும் மீண்டும் படிப்பில் சேரலாம் Multiple exit and multiple entry முறையை அறிமுகப்படுத்துகிறது. இது இடைநிற்றலை அதிகரிப்பதோடு பல குழப்பங்களையும் பாதிப்புகளையும் ஏற்படுத்தும்.



பேராசிரியர் முனைவர் **சு. கிருஷ்ணசாமி,**
முன்னாள் உறுப்பினர்
ஐக்கிய நாடுகள்
வளர்ச்சித் திட்டம் (UNDP)
முன்னாள் உறுப்பினர்
செயலர் தமிழ்நாடு மாநில
உயர்கல்வி மன்றம்.

இதுவரையில் மாணவர்களின் சமூகநிலை மற்றும் பெற்றோர்களின் ஆண்டு வருமானத்தை அடிப்படையாகக் கொண்ட சமூக பொருளாதார அடிப்படையில் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை (Scholarship) வழங்கப்படுகிறது. ஆனால் புதிய கல்விக் கொள்கை மாணவர்களின் கல்வித்தகுதி மற்றும் திறமையின் அடிப்படையில் (Merit based scholarship) கல்வித் தொகை வழங்கப்படும் என்று அறிவித்துள்ளது. சமூக பொருளாதார அடிப்படையிலான கல்வி உதவித் தொகை வழங்கும் முறை இருப்பதால் தான் ஏழை, நடுத்தர பொருளாதாரப் பின்னணி கொண்ட பெற்றோர்கள் தமது பிள்ளைகளைப் படிக்க வைக்கிறார்கள். கல்வி உதவித் தொகை வழங்குவதற்கு நடைமுறையில் இருக்கும் சமூக பொருளாதார அளவுகோள் மாற்றப்பட்டு தகுதி திறமை எனும் அளவுகோல் புகுத்தப்படுமானால் ஏராளமான மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை கிடைக்காத நிலை ஏற்படும். இதனால் இடைநிற்றல் மிக அதிகமாகும். ஏழை, நடுத்தர குடும்பங்களை சேர்ந்த மாணவர்களின் கல்வி பாதிக்கப்படும். இது திராவிட இயக்கம் கடைபிடிக்கும் சமூகநீதி கொள்கைக்கு எதிரானதாகும்.

ஒன்றிய அரசு அறிவித்துள்ள புதிய கல்விக் கொள்கை இவற்றை போன்று இன்னும்பல பாதிப்பான கருத்துக்கள் உள்ளன. கூட்டாட்சித் தத்துவம், சமூகநீதிக்கு எதிராக ஒன்றிய அரசின் புதிய கல்விக்கொள்கை உள்ளது. அதனால்தான் தமிழ்நாடு அரசும் மற்ற சில மாநில அரசுகளும் ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கையை ஏற்க மறுக்கின்றன.

இந்தியாவில் இரண்டாவது இடத்தில் தமிழ்நாடு பள்ளிக்கல்வித் தரம் உள்ளது. உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் (GER) பல ஆண்டுகளாக தமிழ்நாடு தொடர்ந்து முதலிடத்தில் இருந்து வருகிறது. உயர்கல்வி நிறுவனங்கள் தேசிய தர வரிசைப் பட்டியலில் (NIRF) கடந்த மூன்று ஆண்டுகளாக (2022,2023,2024) தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் மற்றும் மாணவியர்கள் சேர்க்கையிலும், Ph.D. ஆராய்ச்சியிலும் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டில் செயல்படுத்திவரும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் இந்தியாவின் பிற மாநிலங்களாலும் உலகின் சில நாடுகளாலும் பாராட்டப்பட்டு அங்கெல்லாம் செயல்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் நான் முதல்வன், புதுமைப்பெண், தமிழ்புதல்வன் மற்றும் 7.5% இடஒதுக்கீடு போன்ற பல லட்சம் திட்டங்கள் மூலம் பல மாணவர்கள் பயன்பெற்று முன்னேறியுள்ளார்கள். மாணவர்கள் சேர்க்கை அதிகரித்துள்ளது. இதனால் பெரிய கல்வி மற்றும் சமுதாய புரட்சி ஏற்பட்டு வருகிறது.

இந்தியாவும் உலகநாடுகளும் போற்றும் போற்றும் வகையில் தமிழ்நாடு கல்வியில் மிகச் சிறந்து விளங்கி வருகிறது. அப்படிப்பட்ட கல்வியில் சிறந்த தமிழ்நாடு அரசு சார்பாக தமிழ்நாடு அரசு கல்விக்கொள்கை 2025 பள்ளிக்கல்வித் துறை எனும் ஆவணத்தை 8.8.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார். தமிழ்நாடு அரசின் இந்த கல்விக் கொள்கை தமிழ்நாட்டு பள்ளி மாணவர்களின் கல்வித் திறனை உலக அளவு உயர்த்துவதாக மிக சிறப்பாக உள்ளது. தமிழ்நாடு அரசின் கல்வி கொள்கை ஆவணத்தில் பயனுள்ள பாராட்டத் தக்க பல சிறப்புத் திட்டங்கள் உள்ளன.

தமிழ், ஆங்கிலம் எனும் இருமொழிக் கொள்கை தொடரும், பள்ளிகளில் 10 வகுப்பு வரை தமிழ் கட்டாய மொழியாக இருக்கும், தொடக்கப் பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை தமிழ்மொழி கற்பிக்கப்படும்.

கிராமப்புற பழங்குடியின தாழ்த்தப்பட்ட மற்றும் மாற்றுத்திறனாளி மாணவர்கள் கல்வி மேம்படுத்தப்படும். ஆசிரியர்களுக்கு உளவியல் வகுப்பறை நிர்வாகம் கற்பித்தல் மற்றும் கூடுதல் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும்.

11ம் வகுப்பிற்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு மிகுவித்த மெய்நிலை, (Augmented Reality) செயற்கை நுண்ணறி (Artificial Intelligence) மெய்நிகர் உண்மை (Virtual Reality) ரொபாட்டிக்ஸ், தொழிற்நுட்பம் போன்ற புதிய பாடங்களும் கற்பிக்கப்படும். பள்ளிகளில் ஸ்மார்ட் வகுப்பறைகள் உருவாக்கப்படும். திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்படும். தமிழ்நாட்டில் 11ம் வகுப்பு மாணவர்களுக்கு அரசு பொதுத் தேர்வு நடத்தப்படாது. 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ஒரு அரசுப் பொதுத் தேர்வு நடத்தப்படும். தலைமைப்பண்பு, பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் திறன் போதிக்கப்படும்.

புதிய சிந்தனை, படைப்பாற்றல், எதிர்கால சிந்தனை, ஆய்ந்தறியும் ஆற்றல், விமர்சன சிந்தனை, வெல்லும் வல்லமை போன்ற திறன்களை உள்ளடக்கிய பன்னாட்டுத் தரம்மிக்க பாடத்திட்டம் உருவாக்கி வழங்கப்படும். உயர் தொழில் நுட்பம் தொழில்முனைவு மற்றும் வேலை பெறும் திறன் வளர்த்தல் போன்ற பல திறன்கள் பாடத்திட்டத்தில் போதிக்கப்படும்.

இடைநிற்றலை தவிர்ப்பதற்கு 1 முதல் 8 வகுப்பு வரை அனைத்து மாணவர்கள் தேர்ச்சி அடைந்தவர்களாக அறிவிக்கப்பட்டு அடுத்த வகுப்புகளுக்கு ஆண்டுதோறும் அனுப்பப்படுவார்கள்.

பள்ளி மாணவர்களுக்கு மருத்துவ பரிசோதனை நடத்தப்படும். கபடி, சிலம்பாட்டம் போன்ற பாரம்பரிய விளையாட்டுகள் மற்றும் கால்பந்து, கூடைப்பந்து, ஓட்டப்பந்தயம் போன்ற விளையாட்டுகளும் ஊக்கப்படுத்தப்படும். ஓவியம், சிற்பம், இசை, நடனம் போன்றவை பாடத்திட்டத்தில் சேர்க்கப்படும்.

உலகத் தரம்வாய்ந்த பள்ளி கல்வி தமிழ்நாட்டில் வழங்கப்படும் என்று தமிழ்நாடு கல்வி கொள்கை 2025 கூறுகிறது.

மலையடிவாரப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு சமவாய்ப்பு வழங்கப்படும். அரசு பள்ளிகளில் கட்டமைப்பு மேம்படுத்தப்படும் என கூறப்பட்டுள்ளது. தொழில்நுட்பம் சார்ந்த பயனுள்ள கல்வி வழங்கப்படும். மாணவர்களுக்கு பாடத்திட்டத்துடன் நாட்டுப்பற்று அரசியல் சாசனம், மனிதநேயம், சமூக சமத்துவம் போன்ற நற்கருத்துகள் போதிக்கப்படும். தலைமைப் பண்பு, கண்டுபிடிப்புத் திறன், புதிய பார்வை, அரசியல் சாசன சிந்தனை, பன்னாட்டு தொழில்நுட்ப போட்டித் திறன், கூட்டு செயல்பாடு, சுகாதார சிந்தனை, சமூகம், மொழிப்பற்று, நாட்டுப்பற்று, மனிதநேய சிந்தனை மேம்பாடு, தொழில்முனைவு விஞ்ஞான கண்டுபிடிப்பு, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, நீர் மேலாண்மை, சமூக சேவை பள்ளி ஈடுபாடு, முதியோர் நேசம், குழந்தைகள் மற்றும் பெண்களை மதித்தல் கற்பிக்கப்படும்.

தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள கல்விக் கொள்கையில் பள்ளி மாணவர்கள் முன்னேற்றம் ஆசிரியர்கள் திறன் மேம்பாடு, கல்வி தரம் உயர்வு, சமூக பொருளாதார பண்பாட்டு முன்னேற்றம் போன்ற பல சிறப்புகள் உள்ளன. தமிழ்நாடு அரசின் கல்விக் கொள்கை 2025 சிறப்பானதாகவும் பாராட்டும்படியாகவும் உள்ளது.

# தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பி.எல்.ஏ.-2 ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தென்காசி.நவ.2–

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் வாக்கு சாவடி முகவர்கள் (BLA–2) பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (BDA) ஆலோசனைக் கூட்டம் குறித்து தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:–



திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க,கழக துணை பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்களின் வழிகாட்டுதலின் படி,தென்காசி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட சங்கரன்கோவில்,வாசுதேவநல்லூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் வாக்குச்சாவடி முகவர்கள் (BLA–2) பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (BDA) ஆலோசனை கூட்டம் நாளை (03–11–2025– திங்கட்கிழமை) எனது தலைமையில் (மாவட்ட செயலாளர் ஈ.ராஜா) மாலை 4 மணி அளவில் சங்கரன்கோவில் ரயில் நிலையம் அருகில் உள்ள நம்பி டிரேடர்ஸ் கேரளா பர்னிச்சர் கீழ்புறம் சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதிக்கும்,அதன் பின்னர் அன்று மாலை 6 மணி அளவில் வாசுதேவநல்லூர் தொகுதிக்கு சிவகிரியில் உள்ள பாரத் பள்ளி அருகில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ். ரவிச்சந்திரன்,துணைச் செயலாளர் எஸ்.ராஜா முகம்மது ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

ஆகவே நிகழ்வில் சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு,பொதுக்குழு உறுப்பினர் கள்,ஒன்றிய, நகர, பேரூர்,கழகச் செயலாளர்கள், வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள், வாக்குச்சாவடி முகவர்கள் (BLA–2) பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (BDA) பூத் ஒருங்கிணைப் பாளர்கள் ஆகியோர்கள் தவறாது கலந்து கொள்ள வேண்டும்.

பொருள்: 1. என் வாக்குச்சாவடி–வெற்றிச்சாவடி குறித்து.

2.SIR. (சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த சீராய்வு) குறித்து.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.